# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, THOOTHUKUDI.

| | | |
|---|---|---|
| Calendar<br>Miscellaneous<br>(Chapter.. | ... | DEPOSITION OF WITNESS |
| Preliminary Register | ... | Case No. S.C.No.249/2024 |
| Sessions | ... | |
| Deposition of witness for | | Prosecution - P.W.6<br>Defence<br>Court |

| | |
|---|---|
| Name | பிரதீஸ் |
| Father's Name | த/பெ.அசோக்ராஜ் |
| Village | அத்திமரப்பட்டி |
| Taluk | |
| Age | 27 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 24.02.2026.

**(1, 2 எதிரிகள் ஆஜர்.)**

**முதல் விசாரணை :-**

நான் தற்போது முத்தையாபுரம் அத்திமரப்பட்டி அம்மன் கோவில் தெருவில் குடியிருந்து வருகிறேன். தற்போது வேம்பார் உப்பளம் வைத்து தொழில் செய்து வருகிறேன். எனக்கு எதிரிகளை தெரியாது. இதற்கு முன்பும் பார்த்தது இல்லை. எனக்கு இவ்வழக்கு பற்றி எதுவும் தெரியாது. தற்போது என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அத்தாட்சிகளில் என்னுடைய கையெழுத்துக்கள் எதுவும் இல்லை. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சியை பிறழ்சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்வதற்கு அரசு தரப்பில் அனுமதி கேட்கப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது.**

<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை :-</u>

போலிசார் விசாரணையில் 17.05.2024ம் தேதி பகல் 02.00 மணியளவில் நானும் பாலசுப்பிரமணியன் என்பவரும் குலையன்கரிசல் வாழை தோட்டம் அருகில் இருந்தபோது முத்தையாபுரம் காவல் நிலைய ஆய்வாளர் அவர்கள் முத்தையாபுரம் காவல் நிலைய குற்ற எண்கள்.163/2024 மற்றும் 131/2024 வழக்கில் சம்பந்தப்பட்ட எதிரிகளான ஜெயந்த்குமார் என்ற ஜெயந்த் மற்றும் அபிலாஷ்வர்மா என்ற அபி ஆகியோர்களை கைது செய்தார்கள் என்றும் அப்போது ஜெயந்த்குமார் என்ற ஜெயந்த் என்பவர் பகல் 02.15 மணியளவில் தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்தார்கள் என்றும் அதனடிப்படையில் அவர் ஆஜர்படுத்திய அருவாள் ஒன்றை பகல் 03.15 மணியளவில் அத்தாட்சி தயார் செய்து கைப்பற்றினார்கள் என்றும் அபிலாஷ்வர்மா என்ற அபி ஆஜர்படுத்திய கத்தி ஒன்றை பகல் 03.40 மணிக்கு அத்தாட்சி தயார் செய்து கைப்பற்றினார் என்றும் மேற்படி ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அத்தாட்சிகளில் நாங்கள் இருவரும் சாட்சியாக இருந்து கையொப்பம் செய்தோம் என்று கூறிவிட்டு தற்போது உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை -</u> இல்லை.**

**ஒம்/-R.V.ராஜகுமார்,**
**தலைமை நீதித்துறை நடுவர்,**
**தூத்துக்குடி.**